26.03.2024
அ.வ.எண்.76/2017

சுந்தர்ராஜ் (P.W.2)

<u>குறுக்கு விசாரணை :</u>

1. எனது சொந்த ஊர் எது என்றால் குளச்சல் ஆகும். தற்போது குளத்திட்டையில் வசித்து வருகிறேன். எனக்கு என்ன தொழில் என்றால் கான்கிரீட் போடுவது ஆகும். வாதியினுடைய கணவர் கொத்தனார் வேலை செய்கிறார் என்றால் சரிதான். குளத்திட்டைக்கும் குளச்சலுக்கும் எவ்வளவு கிலோமீட்டர் இருக்கும் என்றால் 7 கிலோமீட்டர் இருக்கும். நான் தற்போது வசித்து வரும் இடத்திற்கும் வழக்கு சொத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 3 கிலோமீட்டர் இருக்கும். வாதியை எவ்வளவு வருடமாக தெரியும் என்றால் சுமார் 25 வருடமாக தெரியும். வழக்கு ஏ பட்டிகை சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு ஏ பட்டிகை சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 663/7 ஆகும். சர்வே எண் பற்றி வாதி சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு நான்தான் கான்கிரீட் போட்டேன் என்றால் சரிதான்.

2. வழக்கு பட்டிகை சொத்தின் எல்கை பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியும். வடக்கு பக்கம் வேறு ஒரு நபரின் சொத்து உள்ளது அவரின் பெயர் தெரியாது. தெற்கு பக்கம் தொப்பி என்பவரின் சொத்து உள்ளது. கிழக்கு பக்கம் சாலை உள்ளது. மேற்கு பக்கம் வாதியின் கொளுந்தியாரின் சொத்து உள்ளது. மேற்படி எல்கைகள் அனைத்தும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. ஏ பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் 8 1/2 சென்ட் இருக்கும். வாதிக்கு எத்தனை ஆண் பிள்ளைகள் என்றால் 3 ஆண் பிள்ளைகள் ஆகும். மூத்த மகன் குளத்திட்டையில் உள்ள டிஸ்கோ டெய்லர் ஜான்சனின் மகளை திருமணம் செய்தார் என்றால் சரிதான். மேற்படி ஜான்சனின் வீட்டிற்கு எதிர்புறம் தான் என்னுடைய வீடு உள்ளது என்றால் சரியல்ல. 200 அடி தள்ளி உள்ளது. மேற்படி ஜான்சனை எவ்வளவு வருடமாக தெரியும் என்றால் எனக்கு திருமணம் ஆன நாளிலிருந்து தெரியும். வாதி பெயரில் பிரதிவாதி கருங்கல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு நடந்து கொண்டிருப்பது எத்தனை வருடமாக தெரியும் என்றால் சுமார் 6 வருடமாக தெரியும்.

3. வழக்கு நிலுவையில் இருக்கும்போது சுமார் எத்தனை முறை வழக்கு பட்டிகை சொத்திற்கு சென்றுள்ளேன் என்றால் சுமார் 3 முறை சென்றுள்ளேன். வாதியின் கணவருக்கு வழக்கு பட்டிகை சொத்து மற்றும் சாலைக்கு கிழக்கு பக்கம் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். வாதியின் கணவருக்கு குடும்ப வீடு ஒன்று உள்ளது பற்றி தெரியுமா என்றால் மேற்படி வீட்டிற்கு மேற்கு பக்கம் உள்ளது. வாதி கார் வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் வீட்டிற்கு கார் செல்லக்கூடிய பாதையின் சர்வே எண் என்னவென்று தெரியுமா என்றால் தெரியாது. விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது ஆனால் 12 அடி வீதி ஆகும். மேற்படி பாதை யார் யாருக்கு சொந்தமானது என்றால் தெரியாது. ஏ பட்டிகை சொத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தது மற்றும் வழிப்பாதைக்காக கேட் அமைத்ததெல்லாம் நான் தான் என்றால் சரிதான். பில்லர் மற்றும் ஆர்ச் எத்தனை வருடங்களுக்கு முன்பு போட்டது என்றால் சுமார் 25 வருடங்களுக்கு முன்பு போட்டோம். மேற்படி பில்லர் மற்றும் ஆர்ச் போடுவதற்கு சுமார் எவ்வளவு பணம் செலவாகியிருக்கும் என்றால் சுமார் 7000/- ரூபாய் செலவாகியிருக்கும். வழிப்பாதைக்கு தெற்கு பக்கம் உள்ள சொத்து பி பட்டிகையின் பகுதி சொத்து என்றால் அது பற்றி தெரியாது.

4. மேற்படி வழிப்பாதையானது ஏ பட்டிகை சொத்தின் கடைசி அற்றம் வரை செல்லுமா என்றால் சுமார் 30 அடி தூரம் செல்கிறது. நான் தான் சுற்றுச்சுவர், பில்லர் மற்றும் ஆர்ச் ஆகியவற்றை கட்டினேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் மேலும் வழக்கு பட்டிகை சொத்து குறித்த எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஜான்சனின் மகளை வாதியின் மகனுக்கு திருமணம் செய்துகொடுத்த பின்புதான் பிரதிவாதிகளின் இடத்தை வாதி ஆக்கிரமிப்பு செய்து மேற்படி கட்டுமானங்களை கட்டினார் என்றால் சரியல்ல. மேற்படி ஜான்சனின் ஏற்பாட்டின்பேரில்தான் நான் வாதிக்காக வேண்டி பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.